## 36. விண்ணின் மைந்தன் மண்ணில்

**பல்லவி**

விண்ணின் மைந்தன் மண்ணில் வந்தார்
என்ன சந்தோஷம் ஆனந்தமே
இருளில் இருக்கும் ஜனங்களுக்கு
மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று

*ஹப்பி ஹப்பி கிறிஸ்மஸ்..*
*மேரி மேரி கிறிஸ்மஸ்..*

**சரணங்கள்**

1. வானதூதர் வாழ்த்தினரே
உன்னத பாலனை போற்றினரே
- ஹப்பி ஹப்பி

2. மேய்ப்பர்கள் யாவரும் மகிழ்ந்தனரே
குழந்தை பாலனை பார்த்ததுமே
- ஹப்பி ஹப்பி

3. ஞானிகள் மூவரும் தேடினரே
பரிசுத்த பாலனை தொழுதனரே
- ஹப்பி ஹப்பி

4. பாவங்கள் சாபங்கள் ஒழித்திடவே
இறைமகன் இயேசு பிறந்திட்டாரே
- ஹப்பி ஹப்பி